## செய்தி துணைப்பாடம்

இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி'க் கதையின் மூலம் விளக்குக.

குறிப்புச் சட்டகம்

- முன்னுரை
- வித்துவான்
- இசை மயக்கம்
- செய்தி
- முடிவுரை

முன்னுரை:

செய்தி என்னும் சிறுகதையின் ஆசிரியர் தி.ஜானகிராமன். இக்கதை 'சிவப்பு ரிக்ஷா' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதை இக்கதையில் காண்போம்.

வித்துவான்:

இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை. அத்தகைய இசைக்குக் காரணம் இசைக் கருவிகள், தமிழக இசையில் தன்முத்திரை பதித்தது நாதஸ்வரம். இதில் பல இராகங்களைக் கொண்டு வித்துவான் வாசித்தார், அதே நிகழ்ச்சியில் பிலிப் போல்ஸ்கா என்ற வித்வானும் வந்திருந்தார்.

இசை மயக்கம்:

நாதஸ்வரக் கலைஞர் வாசிக்கத் தொடங்கினார். நாதஸ்வர இசை இனிக்க ஆரம்பித்தது. போல்ஸ்கா சிரித்தபடியே தன்னையே இழந்து இரசிக்கின்றார். இசை வெள்ளத்தில் மிதக்கின்றார். வெளிநாட்டவர் தமிழக இசைக்கு மெய்மறக்கின்றனர். வித்துவானின் சாமாராகம் அனைவரையும் மயங்கச் செய்தது. ஆட வைக்கவும் செய்தது.

செய்தி:

வித்வானிடம் சாந்தமுலேகாவை 5, 6 முறை வாசிக்கக் கேட்டு மகிழ்ந்தார். இதில் ஒரு செய்தி இருப்பதாகவும், ஏதோ ஒரு உலகத்தில் இருந்து வந்த செய்தி கேட்கிறது, நான் அதில் மூழ்கிவிட்டேன் என்றார் போல்ஸ்கா, எனக்கு அனுப்பிய செய்தி, உலகத்திற்கே அனுப்பிய செய்தி.

அது தமிழ் இசையின் செய்தி. வேறு எந்த சங்கீதமும் இதனைக் கொடுக்கவில்லை. அதனை நான் வாங்கிக் கொண்டேன் என்கிறார்.

முடிவுரை:

போல்ஸ்காவின் செயல்பாடுகள் இசைக்கு நாடு, மொழி, மதம் என எதுவும் இல்லை என்பதை உணர்த்துகிறது,